திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, அரசியல் கட்சிகள் மத்திய பட்ஜெட்டைக் கொளுத்தியதாகச் சொல்லப்படுகிறது. மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட் முழுவதையும் கொளுத்தினார்களா ? அல்லது, அதிலே ஜனங்களைப் பாதிக்கக்கக்கூடிய வரிகள் உள்ள பகுதிகளை, அதாவது கார்டு, கவர், இரயில்வே கட்டணங்கள் இவைகளை உயர்த்திய பகுதிகளை மட்டும் கொளுத்தினார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பட்ஜெட் முழுவதையுமே அவர்கள் கொளுத்தவில்லை. அதிலே பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய வரிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று கருதினார்களோ அந்தப் பகுதி கொளுத்தப்பட்டது.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அந்த பட்ஜெட்டின் மூலம், மக்கள் மீது மத்திய சர்க்காரால் விதிக்கிற வரிச் சுமையை எதிர்க்கும் வகையில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வகையில், செய்யப்பட்ட சாதாரணமான காரியம் அது. அதுபோன்ற காரியம் ஏற்கனவே நடத்தப்பட்டிருக்கிறது. அந்த பட்ஜெட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளை எரிப்பது சட்டப்படி குற்றம் அல்ல என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே, அதைப்பற்றி அதிகப்படியாக இந்தச் சட்டப் பேரவையில் யாரும் அதைப் பிரச்சினையாகக் கிளப்புவதற்கு இடம் இல்லை என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கடைசி வாதத்தை ஏற்றுகொண்டு, இதைப் பற்றி மேலும் விவாதிக்காமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

I.A.S. Posts

*3 *Q.*—Dr. HABIBULLAH BAIG : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of posts in the I.A.S. Cadre that is normally required for this State; and

(*b*) the total number of posts in the I.A.S. Cadre at present?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

(அ) ஐ.ஏ.எஸ். தமிழ் நாட்டுப் பிரிவில் 156 அதிகாரிகள் உள்ளனர்.

(இ) மாநில அரசாங்கத்தைக் கலந்து இந்த அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 184 என்று இந்திய அரசு முடிவு செய்தது. இதன் விவரம் வருமாறு :—

(1) நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டிய பதவிகள்	95
(2) மேலே 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள பதவிகளில் 20 சத வீதம் என்ற வகையில் நியமன ஒதுக்கம்	19

(3) மேலே 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள பதவிகளில் 11 சத விதம் என்ற வகையில் விடுப்பு ஒதுக்கம்	10
(4) மேலே 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள பதவிகளில் 20.60 சத விதத்தில் இளநிலைப் பதவிகள்	19
(5) மேலே 1-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள பதவிகளில் 10.59 சத விதம் என்ற அளவில் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட பதவிகள்	10
(6) 1954-ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். (நியமன) விதிகளின் 8-வது விதியையொட்டி பதவி உயர்வு மூலமாகவும் அதிகாரிகளைத் தெரிந்தெடுத்தல் மூலமாகவும் நிரப்பப்படவேண்டிய பதவிகள்	31
ஐ.ஏ.எஸ். மாநிலத் தொகுதியில் அனுமதி பெற்ற அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை	184

(நேரடி நியமனம் மூலம் 153 பதவிகளும் மாநிலப் பணியாளர்த் தொகுதியிலிருந்து பதவி உயர்வுமூலம் 31 பதவிகளும் நிரப்பப்படுகின்றன.)

மேலே குறிப்பிட்டுள்ள 184 பதவிகளில் 126 முதுநிலைப் பதவிகளாகும். (இவற்றில் 90 பதவிகள் மாநில அரசாங்கத்தின் கீழும் 36 பதவிகள் மத்திய அரசாங்கத்தின் கீழும் உள்ளன.) எஞ்சிய பதவிகள் இளநிலைப் பதவிகள்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ். பதவிகளை வகித்துவருபவர்களில் எத்தனை பேர் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ? தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், வேறு மாநிலங்களில் ஐ.ஏ.எஸ். பதவிகளில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : என்னிடத்தில் அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேலை பார்க்க வருகிற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழ் அறிந்திருக்க வேண்டுமா ? நல்ல தமிழ் அறிந்திருக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாட்டுக்கு வருகிற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நல்ல தமிழ் அறிந்திருக்க வேண்டுமென்பது ஒப்புக் கொள்ளப்பட்ட முறைகளில் ஒன்று. பல

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நல்ல தமிழ் அறிந்திருந்து, பொதுக்கூட்டங்களில் கூட நன்றாகப் பேசக்கூடிய அளவுக்குப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

Dr. H. V. HANDE : Sir, of late we are not able to supply adequate number of I.A.S. officers from our State and I am sure the Hon. Chief Minister is also conscious of it. In view of this tragic situation, has he investigated the exact causes that are responsible for not being able to supply adequate number of I.A.S. officers now—whether it is due to any defect in the educational system or whether we are not able to improve the standard of education—though in the previous decade we were able to supply a large number of them not only for our State but also for other States. What is the reason for the fall in the 'production'—if I may use that expression—of the I.A.S officers from our State?

The Hon. Thiru C. N. ANNADURAI : I would like to get clarification from the hon. Member himself.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, இப்போது தமிழ் நாட்டில் 184 ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விகிதாசார அடிப்படையில் பதவிகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா ? இல்லையென்றால் ஏன் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

Thiru K. VINAYAKAM : Sir, for the recruitment of administrative officers that are wanted for our State, the Union Public Service Commission conducts competitive examinations, in which all students from the various States take part. Is the Hon. Chief Minister aware that in the last year or the year before last, the number of successful candidates from Tamilnad were tantalisingly negligible when compared to the successful candidates from other States. Is he aware that that is due to the defective educational policy which the Government are pursuing?

The Hon. Thiru C. N. ANNADURAI : That was exactly the clarification that I expected from the hon. Member, Dr. Hande and I am glad that the hon. Member has given it. Progressively, our performance in the examinations has been, as my hon. Friend has stated, woefully lagging behind and the Government are thinking of how best to rectify this defect and take adequate measures of assistance for the candidates who appear for these examinations.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ். கிரேடில், என்ஜினியரிங் கிரேடில், அக்ரிகல்சுரல் கிரேடில் எவ்வளவு பேர் இருக்க வேண்டுமென்பதைப்பற்றி இந்திய

1969 ஆகஸ்ட் 16]

அரசாங்கத்திடமிருந்து இந்த அரசுக்கு ஏதாவது குறிப்பு வந்ததா? மத்திய அரசு, இந்த அரசை இதுபற்றிக் கலந்தாலோசித்ததா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அதுபற்றிய தகவல்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: தலைவர் அவர்களே, மெட்ராஸ் ஸ்டேட் எந்த விஷயத்திலும் முன்னணியில் நிற்கிறது. யூனிவர்சிடி கிரேடிலும் மற்றவற்றிற்கு குறைச்சல் இல்லையென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கடந்த சில ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ். பரீட்சையில் நிறைய பேர் பாஸ் செய்யாததற்குக் காரணம் ஏதாவது இருக்கிறதா? தற்போதைய கல்விமுறையினால் இந்தக் குறை ஏற்பட்டதா? அப்படி கல்வி முறையில் இக்குறை ஏற்பட்டதென்றால் கல்வி முறையைத் திருத்தியமைப்பதுபற்றி ஏதாவது பரிசிலனை இருந்து வருகிறதா? இந்த அரசு இதற்காக எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் என்ன? முதலமைச்சர் அவர்கள் இதற்கான காரணத்தைப் பரிசிலனை செய்வாரா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கடந்த சில ஆண்டுகளாகவே நம்முடைய மாநிலத்திலிருந்து சென்று ஐ.ஏ.எஸ். பாஸ் செய்கின்றவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்தக் குறை கல்வி முறையினால் ஏற்பட்டதா, அல்லது வேறு காரணங்களினால் ஏற்பட்டதா என்பதுபற்றி ஆராய்ந்து, என்ன செய்யலாம் என்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Chief Minister whether any posts have been kept vacant by this Government?

THE HON. THIRU C. N. ANNADURAI: I do not have details about that. The main question is about the number of I.A.S. officers and how they are recruited.

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

***4 வினா—திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

புறம்போக்கில் வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மின்சார பம்பு இணைக்க அனுமதி அளிக்கும் திட்டம் அரசினரின் ஆய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு இந்தக் கருத்தை ஆய்வு செய்து பின்பற்ற வேண்டியதில்லை என்று தீர்மானித்துள்ளது.